வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 42/2019

வழக்கு சாட்சி – ம.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: நிரோசினி | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 25.11.2025.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.15 மணி)

நான் 2ம் மனுதாரர் ஆவேன், என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1. மாதிரி வரைபடம் நகல் ம.சா.ஆ.2. பார்வை மகஜர் நகல் ம.சா.ஆ.3. TN 65 L 8349 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் ம.சா.ஆ.4. குற்ற இறுதி அறிக்கை நகல் ம.சா.ஆ.5. 1ம் மனுதாரர் காயச்சான்று நகல் ம.சா.ஆ.6. 1ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.7. 1ம் மனுதாரர் இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.8. 1ம் மனுதாரர் வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.9. என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.10. 3ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.11. 4ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.12. 5ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.13. (ம.சா.ஆ.7 முதல் ம.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது). மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.11.25 17:39:27 +0530

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சமயம் இருசக்கர வாகனத்தை எனது கணவர் தான் ஓட்டிச்சென்றார். அவருடன் சேர்ந்து மேலும் 2 பேர் அந்த வாகனத்தில் பயணம் செய்தார்கள். விபத்து சமயம் எனது கணவர் ஹெல்மெட் அணிந்திருந்ததாக தான் சொன்னார்கள். அதுபற்றி முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, அவருக்கு அப்போது பழகுநர் ஓட்டுநர் உரிமம் இருந்தது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு சான்று இல்லை என்றால் எனக்கு தெரியாது. அந்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளாரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. விபத்தானது மண்டபம் கேம்ப் பூந்தோண்டி மாரியம்மன் கோவில் அருகே நடந்தது. மண்டபம் கேம்ப்ற்கு எதிரே வடக்குப்பக்கம் அந்த கோவில் உள்ளது. என் கணவர் விபத்து சமயம் மண்டபம் கேம்ப்பில் உள்ள எங்கள் வீட்டிற்கு வந்தார். இரண்டு பேருடன் என் கணவர் இருசக்கர வாகனத்தில் வந்தபோது அவருக்கு எதிரே ஒரு பேருந்து வந்தது என்றால் சரிதான். அந்த பேருந்தை எனது கணவர் முந்திச் செல்ல முயன்று ஓவர் டேக் செய்தபோது தான் எதிரே வந்த அம்பாசிடர் கார் மீது என் கணவர் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியது என்றால் என் கணவரின் மோட்டார் சைக்கிளின் மீது தான் அந்த அம்பாசிடர் கார் மோதியதாக சொன்னார்கள். கேம்ப்பிற்கு வருவதற்கு அந்த பேருந்தை முந்திச்செல்ல வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. என் கணவர் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல், போக்குவரத்து விதிகளை அனுசரிக்காமல், விதிகளை மீறி மூன்று நபர்களுடன் வாகனத்தை ஓட்டி அவருக்கு முன்பாக சென்ற பேருந்தை ஓவர் டேக் செய்ய முயன்று எதிரே வந்த அம்பாசிடர் கார் மீது மோதி அவரது கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தில்

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2025.11.25 17:39:35 +0530

என் கணவருடன் பயணம் செய்த ஒருவர் இறந்துவிட்டதால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவரின் வருமானத்தை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடந்த 8 வருடம் கழித்து தான் என் கணவர் இறந்துபோனார். என்னுடைய கணவரின் இறப்பிற்கும், விபத்திற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 காயச்சான்றின் படி என்னுடைய கணவர் பூரண குணமடைந்துவிட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவு தான் காரணம் என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எங்களுக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து நடந்து 7 வருட காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை .**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.11.25 17:39:42 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.